DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 243/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மயிலம்மாள் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : தண்டபாணி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 24.09.2024

**முதல் விசாரணை**

நான் மலையாண்டிபட்டினத்தில் வசித்து வருகிறேன். வீட்டோடு இருக்கிறேன். இந்த வழக்கில் நான் சமாதானமாக சென்று விட்டேன். யாரும் கட்டாயப்படுத்தவில்லை. விருப்பத்தோடு சமாதான மனு தாக்கல் செய்து கையெழுத்து செய்தேன். ஆஜர் எதிரி ரவிச்சந்திரன் எனது பெரிய மக்ன். ஆஜர் எதிரி கார்த்திகேயன் எனது சின்ன மகன். ஆஜர் எதிரி மல்லீஸ்வரி எனது மருமகள் ஆவார். எங்களுக்கு இடையே சொத்து தகராறு காரணமாக சிவில் வழக்கு நிலுவையில் இருந்தது கடந்த 2020 ம் வருடம் மலையாண்டிபட்டினனம் பஸ்ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த போது கிழே விழுந்து காயம் ஏற்பட்டு விட்டது. அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் இருந்ததால் முன் யோசனை இன்றி அவர்களின் பெயரை போலிசிடம் சொல்லிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில உள்ள கையெழுத்து என்னுடையது தான அதிலுள்ள விவரம் தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் விசாரணையிலும் இதையே தான் கூறினேன்.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.01.2020 ம் தேதி 01.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் ஏற்கனனேவ இருந்த சொத்து தகராறால் என்னிடம் வந்து உடனடியாக சொத்தை பிரித்து கொடுக்குட் படியு் வழக்கை வாபஸ் வாங்குங்கள் என்றும் தகராறு செய்தும் கையாலும் காலாலும் அடித்தும் உதைத்தனர் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்ட படியால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 243/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயராமன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 24.09.2024

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிநது வருகிறேன். இதற்கு முன்பு உடுமலை காவல் நிலையத்தில் பணிபுரிந்த முதல் நிலை காவலர் ஆனந்த் மற்றும் உதவி ஆய்வாளர் ஆனந்தகிருஷ்ணன் ஆகியோரது கையெழுத்தும் கையொப்பமும் நன்கு பரிசச்யம். அவர்கள் எடுத்த நாட்குறிப்பின் அடிப்படையில் சாட்சியம் சொல்கிறேன். கடந்த 14.01.2020 ம் தேதி முதல் நிலை காவலர் ஆனந்த் நிலைய அலுவலில் இருந்த போது தண்டபாணி மனைவி மயிலம்மாள் என்பவர் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த தகவலின் அடிப்படையில் சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் ஆஜராகி பரிசிலனைக்கு பின் நிலைய குற்ற 32/2020 ச/பி 294(பி),323,506(1) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ. 2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக் கை **அ.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உதவி ஆய்வாளர் 26.01.2020 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சகள் ரவிச்சந்திரன், மிகாவேல் ஆகி யோர் முனனிலையில மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மாதிரி

வரைபடம **அ.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகசர் **அ.சா.ஆ. 5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது பின்னர் சாட்சிகள் மயிலம்மாள், ரத்தினசாமி, முத்துராஜ், செல்வராஜ், ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் வழக்கின் எதிரிகள் மூவரையும் தேடி புலன் வைத்த போது மூவரும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன பிணையம் பெற்று கொண்டனர். பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் சங்கர கணபதி என்பவரை விசாரித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய கருத்துச்சான்றிதழ் **அ.சா.ஆ. 6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் நிலை காவலர் ஆனந்த் என்பவரை விசாரத்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**சொன்ன மாதிரி சொன்னா தேதியில் சொன்ன இடத்தில சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல, எதிரிகள் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் குற்றம் எதும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்ந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு பொய் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.